மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.பி. ராஜு.

திரு. கே.பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையின் சுற்று வட்டாரத்திலிருந்து 18 கி.மீ., 20 கி.மீட்டரில் இருந்துதான் கோயம்புத்தூர் ஆஸ்பத்திரிக்கு வரவேண்டியிருக்கிறது. பெரியநாயக்கன்பாளையம், பேரூர், குனியமுத்தூர், குறிச்சி போன்ற இடங்களில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் செயல்பட்டாலும் அன்றாடம் மக்கள் கோயம்புத்தூரை நாடித்தான் மருத்துவமனைக்கு வருகிறார்கள். புறநகர்ப் பகுதியான குனியமுத்தூர், பேரூர், குறிச்சி போன்ற பகுதிகளில் மருத்துவமனை விஸ்தரிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பச் சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. தாலுகா மருத்துவமனைகள் இருக்கின்றன. கோவையிலே பெரிய மருத்துவமனை இருக்கிறது. எனவே அதை எங்கே விஸ்தரிப்பது என்று எனக்குப் புரியவில்லை. அந்த மருத்துவமனையில் ஏற்கெனவே அனைத்து வசதிகளும் இருக்கின்றன. அது முழுமையாகப் பயன்பட்டுக் கொண்டு இருக்கிறது. கிராமப்புறங்களில் இருக்கிற ஆரம்பச் சுகாதார நிலையம், அதே போல் தாலுகா மருத்துவமனைகளைப் பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். அதற்கு மேலே சூப்பர் ஸ்பெஷாலிட்டி அந்த வசதிகளுக்காகத்தான் கல்லூரி மருத்துவமனைக்கு அவர்கள் வருகிறார்கள்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 7, திருமதி அ.தி. சரஸ்வதி, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்.

7—

காட்டுப்பன்றிகள் பயிர்களை அழிப்பதைப் பாதுகாத்தல்

*25274—**திருமதி அ.தி. சரஸ்வதி:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காட்டுப்பன்றிகள் பயிர்களை அழிப்பதைப் பாதுகாக்க சூரிய சக்தி மின் கம்பி வேலி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

1995 நவம்பர் 3]

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இப்பொருள் பற்றிய கருத்துரு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

திருமதி அ.தி. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் நெஞ்சத்தில் நீக்கமற நிறைந்து நிற்கும், எங்களை எல்லாம் வாழ வைத்துக்கொண்டிருக்கும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் தாளவாடி, கடம்பூர் மலைப் பகுதிகளில் வாழும் மலைவாழ் மக்கள் விவசாயம் செய்யும்போது, காட்டுப் பன்றிகளால் பயிர்கள் அழிந்து, பாதிக்கப்படுகிறார்கள். அங்கு ராகி, கடலை மற்றும் கிழங்கு வகைகள் பயிரிடப்படுகின்றன. அங்கே விவசாயம் செய்யும் மலைவாழ் மக்களின் பயிர்களை எல்லாம் காட்டுப் பன்றிகள் அழித்துவிடுகின்றன. கர்நாடக மாநிலத்தில் இதைத் தடுக்க சூரிய சக்தி மின் கம்பி நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. அதைப்போல நமது அரசும், போக்குவரத்தைப் பொலிவுடனும், வனத் துறையை வளமுடனும் ஆக்கிக்கொண்டிருக்கும் அமைச்சரவர்களும் இங்கே அப்படிச் செய்ய ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பன்றிகளால் பயிர்கள் சேதப்படுத்தப்படுகின்றன என்று கருத்துருவோ அல்லது பொது மக்களிடமிருந்து குறைகளோ எங்களுக்கு வரவில்லை. மாண்புமிகு உறுப்பினரவர்கள் அந்தப் பகுதிகளுக்குச் சென்று பார்க்கிற காரணத்தாலே, பொது மக்கள் அவர்களிடம் சுட்டிக்காட்டியிருக்கலாம். ஆக, அது போன்று சேதப்படுத்துகின்றபோது, கர்நாடக மாநிலத்தில் சோலார் எனர்ஜி என்று சொல்லப்படுகிற சூரிய வெப்பத்தால் மின்சாரக் கம்பிகள் பயிர் செய்யும் பகுதிகளில் போடும் நிலை இருக்கிறதா என்பதை அரசு ஆய்வு செய்யும். அப்படிப்பட்டச் சூழ்நிலை வருகிற போது, பன்றிகளுக்காக வைக்கப்பட்டுள்ள அந்தக் கம்பிகளை அந்த வழியாக பொதுமக்கள் யாராவது செல்லுகிறபோது தெரியாமல் மிதிக்கின்றபோது விபத்துகள் ஏற்படுகிற சூழ்நிலை இருக்கிற காரணத்தாலே அது தடை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் பன்றிகளை அகற்றுவதற்காக வனத் துறையைப் பொறுத்தவரையில் அரசு சில அறிவுரைகளை வழங்கி இருக்கிறது. அங்கே தகரங்களை வைத்துக்கொண்டு சத்தம் இடுகிறபோது,

பன்றிகளை துரத்திவிடலாம். அல்லது சிறிய பட்டாசுகளை வெடித்து, காயமில்லாமல் பன்றிகளை அப்புறப்படுத்தலாம் என்று மக்களுக்குத் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.

திருமதி அ.தி. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் அவர்கள் விரிவாக, விளக்கமாக இங்கே சொன்னார்கள். அதற்கு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன். மேலும் பேட்டரி ஷெல்லால் வரும் கரண்டில் பொதுமக்கள் பாதிக்கப்பட மாட்டார்கள். அதன்மூலம் எலக்ட்ரிக் ஷாக் மட்டும்தான் கொடுக்கமுடியும். அதனால் பன்றிகளும் பயந்துகொண்டு போகும். எனவே பன்றிகள் இறக்க வாய்ப்பு இல்லை. அதற்குக் கூட மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்யலாம். அந்த நடைமுறையைப் பின்பற்றக் கூட ஏற்பாடு செய்யலாம். மேலும் அந்தப் பகுதி மலைவாழ் மக்கள் விவசாயம் செய்யும்போது, அவர்கள் பயிர்கள் பன்றிகளால் பாதிக்கப்படும்போது, விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுவதால், நஷ்ட ஈட்டுத் தொகையை—நமது அரசு—மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் அளிக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பன்றிகளால் அல்ல; யானைகள் பயிர்களைச் சேதம் செய்கின்றபோது, நஷ்ட ஈட்டுத் தொகையை அரசு வழங்குவதற்கு நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறோம். பல பகுதிகளில் அந்த நஷ்ட ஈட்டுத் தொகையை நாம் வழங்கி இருக்கிறோம். பன்றிகளால் பயிர்கள் சேதமாகிறது என்ற குறைபாடுகள் இதுவரை எங்களுக்குச் சுட்டிக்காட்டப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாட்டரிகளைக் கொண்டு மின்சாரத்தை கம்பிகளில் செலுத்துவதன்மூலம் பன்றிகளைத் தடுக்க முடியும் என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதை அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கி. தருமலிங்கம்.

திரு. கி. தருமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலை அடிவாரத்தில் இருக்கும் உழவர் பெருமக்களுக்கு காட்டுப் பன்றிகளால் அதிகம் சேதாரம் விளைவது என்பது உண்மைதான். ஆனால் அந்தப் பன்றி இறைச்சி உண்பதற்கு நன்றாக இருக்கிறது. அதேநேரத்தில் மின்சாரத்தால் கொல்லப்படும் பன்றியின் இறைச்சி கெட்டுவிடுகிறது. எனவே மின்சாரத்தைப் பயன்படுத்தி நாம்

1995 நவம்பர் 3]

கொல்லாவிட்டாலும், அந்தப் பன்றிகளை வன இலாக்கா மூலம் வலை போட்டு—அந்தப் பகுதிக்கு உணவுக்காக வரும்போது வலை போட்டு அதை ஓட வைத்து, பிடித்து, மனித இனத்திற்கு உண்ணும் உணவாக கொடுத்தால் நன்றாக இருக்கும். அதைப் பெரும்பாலானோர் சாப்பிட்டிருக்க மாட்டார்கள். நாங்கள் அதை நன்றாகச் சாப்பிடுகிறோம். நல்ல உணவு அது. காட்டுப் பன்றி நல்ல உணவு. அதனாலே மாண்புமிகு அமைச்சரவர்கள் வன இலாக்கா மூலம் பன்றிகளைப் பிடித்து, உணவாகக் கொடுக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன். (சிரிப்பு)

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதற்காக வலை போடுகிறார் என்பது எனக்குத் தெரியவில்லை. வலை போட்டுப் பார்க்கிறார். ஆனால் அரசு அந்த வலைக்குக் கிடைக்காது. (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 8, டாக்டர் எஸ்.எஸ்.ஆர். இராமதாஸ், இருக்கையில் இல்லை.

வினா எண் 9, திரு. தா. செழியன், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

முற்பகல் 10.35

9—

வெங்கலம்-தொண்டமாந்துறை பாலம் கட்டுதல்

*19795—**திரு. தா. செழியன்:**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் தொகுதி, வெங்கலம்-தொண்டமாந்துறை பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தற்போது ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.